
# சர்வதேச அனுபவங்களிலிருந்
# இலங்கையின்
# தேசிய இனப்பிரச்சினை




JPL
C1146

1146 ZEY

5

# சர்வதேச அநுபவங்களிலிருந்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை

82286

பிருதுவி

சேர்க்கை இல. 417
பகுப்பு இல.
அயோத்தி நூலக சேவைகள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

நதி வெளியீட்டகம்
யாழ்ப்பாணம்.

320.5

சர்வதேச
அநுபவங்களிலிருந்து
இலங்கையின்
தேசிய இனப்பிரச்சனை

★

நதி வெளியீட்டெண்: 5

★

ஆகஸ்ட் 1986

★

விலை ரூபா:- 5-00

## பதிப்புரை

அறிவின் துணைக்கொண்டுதான் இந்த உலகம் தன்னை மாற்றிக் கொண்டது. இந்த உலகில் இனி வரும் மாறுதல்களுக்கும் அதுதான் அடிப்படை. மனிதகுலம் இது வரையில் கண்டறிந்துள்ள அறிவுத் தேட்டங்களை சம அளவில் நுகர்ந்துகொள்ளும் ஒரு பொதுமையான அமைப்பை உலகம் அடையவில்லை. எனினும் அதை நோக்கி அது வளர்ந்து வருகின்றது. இவ் வளர்ச்சிப் போக்கைச் சார்ந்து, தான் வாழும் தேசம், மக்கள் அவர்கள் மத்தியில் மையம் கொண்டுள்ள கூர்மையடைந்த பிரச்சினைகள் தொடர்பாக ஒரு அறிவு சார்ந்த கடமையை செய்யும் நதி வெளியீட்டகம் தன் சக்திக்குட்பட்டவாறு பல்வேறு துறைகளையும் உள்வாங்கிக் கொள்ளும்.

ஒரு வெளியீட்டகம் என்ற வகையில் தன் வெளியீடுகளோடு ஏதோ ஒரு வகையான பொது உடன்பாட்டைக் கொண்டுள்ளதே தவிர வெளியீடுகள் வெளிக்கொணரும் கருத்துக்கள் யாவும் வெளியீட்டகத்தின் கருத்துக்களாக மாட்டா.

எமது இப்பணியின் தொடர்ச்சியாக அரசியல் அரங்கில் தற்போது பிரபல்யம் அடைந்துள்ள இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு சம்பந்தமான இந் நூலை வெளியிடுகிறோம்.

உலகளாவிய அநுபவங்களை உள்வாங்கி எமது அரசியல் அறிவை செழுமைப்படுத்திக் கொள்ளவும், அறிவு பூர்வமான கருத்துத் தர்க்கங்களின் ஊடாக சரியான முடிவுகளை வந்தடையவும் முயலுபவர்களுக்கு இத்தகைய வெளியீடுகள் பயன் அளிக்கும் என நம்புகிறோம்.

இவை போன்ற பலதுறைசார்ந்த-பல்வகைப்பட்ட வெளியீடுகளையும் வெளிக்கொணர்வதை நதி வெளியீட்டகம் தன் கடமை

யாக வகுத்துள்ளது. நதி வெளியீட்டகத்தோடு கைகோர்க்கத் தயாராக உள்ள அனைவரது ஒத்துழைப்பையும் நதி வெளியீட்டகம் வரவேற்கின்றது.

1986 ஆகஸ்ட்,
யாழ்ப்பாணம்,

பதிப்பாளர்கள்

---

வெலிக்கடைச் சிறைச்சாலையில் எமது போராளிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்த போது யாழ். பல்கலைக்கழகத்தில் இதற்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெற்றன. அதில் பல கருத்துரைகள் வழங்கப்பட்டன. அவற்றில் ஒன்றான ''தேசிய இனப் பிரச்சனையும் உலகளாவிய அனுபவமும்'' என்ற தலைப்பில் நடந்த கருத்துரையைத் தழுவியே இப்பிரசுரத்தின் சர்வதேச அநுபவம் என்ற பகுதி எழுதப்பட்டுள்ளது.

பிருதுவி

## முன்னுரை

உலகத்தில் இன்று ஆயிரத்துக்குமேற்பட்ட தேசிய இனங்கள் இருக்கின்றன. இவ் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேசிய இனங்களுக்குமாக உலகில் பொதுவாக இருநூறுக்கும் உட்பட்ட நாடுகளே உள்ளன. இவ்வகையில் உலகமானது பல்தேசிய இன அரசுகளைக் கொண்ட அமைப்புக்குள் உட்பட்டே அமைந்துள்ளது. உலகில் உள்ள நாடுகளில் 90%இற்கும் அதிகமான நாடுகள் பல்தேசிய இன நாடுகளாய் உள்ளன என்பது முக்கியமானது.

பல்தேசிய இனங்களும் ஒரே நாடாக இருக்கின்றது, இருக்க வேண்டும் என்றால் தேசிய இனங்கள் தனித்தனியே தமது உரிமைகளை தனித்துவங்களை பாதுகாக்க கூடியதாய் இருக்க வேண்டும். தேசிய இனங்கள் ஏதோ ஒரு வகையில் தமது உரிமைகளையும், தனித்துவங்களையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஆட்சிமுறையே பல்தேசிய இனங்கள் ஒரே நாடாக இருப்பதற்கு உகந்ததாகும்.

இவ்வாறான ஒரு ஆட்சி முறையை வளர்த்து எடுப்பதில் கடந்த கால வரலாறு வெற்றி கண்டுள்ளது. பல்தேசிய இனங்கள் தத்தமது தேசிய இனப் பண்புகளையும். உரிமைகளையும் பேணிக்கொண்டு ஒரே நாடாக வாழும் ஆட்சிமுறையை எமக்கு வரலாறு பெற்றுத்தந்துள்ளது. இந்த வரலாற்று அனுபவத்திற்கு முரண்பட்ட போக்கைக் கொண்டுள்ள எந்த நாடுகளிலும் தேசிய இனங்கள் பிரிந்து சென்று தனி அரசை அமைக்கும் போக்கிலேயே சென்றுள்ளன என்பதற்கு உலகில் பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக இலங்கையில் தமிழ் தேசிய இனம் இவ்வாறான தனி அரசை அமைக்கும் ஆயுதப் போரில் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் குறிப்பிடலாம். இலங்கையில் தமிழ் தேசிய இனத்தின் முனைப்பான இப்போராட்டத்தின் மத்தியில் பேச்சுவார்த்தை என்கின்ற குரல்களையும் மாகாணசபை. மாநில அரசு என்கின்ற விடயங்களைப்பற்றியும் அரசியல் அரங்கில் கேட்க முடிகிறது.

இலங்கைத் தமிழ் தேசிய இனம் வரலாற்று ரீதியில் தன் மீது செலுத்தப்பட்ட ஒடுக்கு முறைகளுக்கு எதிராக கட்டம் கட்டமாக தீர்வுகளை முன்வைத்து போராடி வந்தது. ஒரே நாடாக இருந்து கொண்டு வாழ்வதற்கு கரங்களை நீட்டியது.

82286

தேசிய [illegible] பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

அப்போதெல்லாம் பெரும் தேசிய வாதிகளால் இவை அலட்சியம் செய்யப்பட்டன. தமிழ் பூர்சுவா தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர். எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித் தெறியப்பட்டன. மேன் மேலும் தமிழ் தேசிய இனத்தின் மேல் ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இனக்கலவரங்கள் திட்டமிட்டு தூண்டி விடப்பட்டன. பொருளாதார வளங்கள் சூறையாடப்பட்டன. பாரம்பரிய பிரதேசங்கள் பறிக்கப்பட்டன. கலாச்சாரம் அழிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒடுக்குமுறைகளில் இருந்து தான் விடுதலை பெற்று தனது தேசியப்பண்புகளை பாதுகாத்துக் கொள்ள தனி அரசை அமைப்பதை விட வேறு வழி இல்லை, என்ற வரலாற்று அனுபவத்தை பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசிய இனம் தனது தனி அரசை அமைக்கும் போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டது.

இப்போராட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஸ்ரீலங்கா இனவாத அரசு திணறி கத்தளித்துக் கொண்டுள்ள நிலையிலேயே ஸ்ரீலங்கா அரசின் பேச்சு வார்த்தை அழைப்புகள், (தேசிய) இனப் பிரச்சனைக்கு சமாதான தீர்வு காணும் பிரேரணைகள் வெளி வருகின்றன. எனினும் மிகவும் முனைப்புற்ற இப்பிரச்சினை தொடர்பாக விஞ்ஞான பூர்வமான விவாதங்கள், ஆக்கபூர்வமான கருத்துத் தர்க்கங்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவகையில் பெரிதாக நிகழவில்லை என்பது துரதிஸ்டவசமானதே. ஒடுக்குமுறைக் குள்ளாக்கப்பட்ட மக்கள் தமது விடுதலையை வெறுமனே அகவிருப்பங்களிலிருந்து அங்கலாய்த்துக் கொள்ளும் நிலைமை நிச்சயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஏகாதிபத்தியங்களின் பொருளாதார அமைப்புகள் தேசிய எல்லைகளைத்தாண்டி தன் ஆதிக்க நகங்களை, மூலதனப்பற்களை மிகவும் மூர்க்கத்தனமாக பதியவைத்துள்ளது. இந்தத் தழும்புகளைத் தாங்கித்தான் வரலாறு நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஈழ விடுதலை போராட்டமும் இந் நியதிக்குட் பட்டது என்ற வகையில், உலகளாவிய அநுபவங்களோடு நமது பிரச்சனைகளையும் ஒப்புநோக்குவதன் மூலம் மட்டுமே ஒடுக்குமுறையாளர்கள், ஏகாதிபத்தியங்கள், ஆளும் வர்க்கத்தினர், அதன் அடிவருடிகள் இவ் வகைப்பட்டோர் தனியாகவோ, தமக்குள் கூட்டுச் சேர்ந்தோ முன் வைக்கும் "தீர்வு" களின் சூட்சுமங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ★

# சர்வதேச அநுபவங்கள்

## சுவிற்சர்லாந்து

பல் தேசிய இன அரசு என்று வகையில் பிரதானமாகவும், பிரபல்யமாகவும் பலராலும் எடுத்துக் கூறப்படும் நாடு தான் சுவிற்சர்லாந்து.

சுவிற்சர்லாந்தில் பிரதானமாக 3 தேசிய இனங்களும் ஒரு தேசிய சிறு பான்மை இனமும் உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ஜெர்மன் இனம் | 70% |
| 2. | இத்தாலிய இனம் | 10% |
| 3. | பிரான்ஸ் இனம் | 19% |
| 4. | ரோமன் இனம் | 1% |

ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் தேசிய இனங்கள் தனித்தனியான மொழிகளைக் கொண்டுள்ளனர் இம்மூன்று மொழிகளும் சுவிற்சர்லாந்தின் உத்தியோக மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன எந்த ஒரு தஸ்தாவேஜை எடுத்துப் பார்த்தாலும், சாதாரண வங்கித் தொடர்பு, கச்சேரித் தொடர்பு, எதை எடுத்து நோக்கினுலும் அங்கு மூன்று மொழிகளிலும் தஸ்தாவேஜுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் எந்த ஒரு மொழிக்காரன் அங்கு சென்றுலும் தனது சுய மொழியில் அவற்றைப் பதிவு செய்யவும், சுய மொழியில் நிர்வாகங்களை நடாத்தவும் உரிமை உள்ளவனுகவும் காணப்படுகின்றுன்.

இவ்வகையில் சுவிற்சர்லாந்து மூன்று மொழிகளுக்கும் சமத்துவம் கொடுத்த அரசாக, உலகின் முதலாவது முதலாளித்துவ பாதையில் மூன்று மொழிகளுக்கும் சமத்துவம் கொடுத்த அரசாக காணப்படுகிறது. சுவிற்சர்லாந்தில் ஒரு வகையான சமஷ்டி ஆட்சி முறை காணப்படுகிறது. இங்கு மொத்தமாக 22 "கன்டன்ஸ்" (CANTONS) காணப்படுகின்றது. இங்கு இவை "கன்டன்ஸ் சிஸ்டம்" என்றே அழைக்கப்படுகிறது

சுவிற்சர்லாந்தில் மூன்று பிரதானமான மக்கள் கூட்டமும் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனியில் இருந்தே குடியேறின. சுவிற்சர்லாந்தின் புவியியல் அமைப்பானது குடியேறியவர்களை கொண்டதாகக் காணப்படுவதால் ஆங்காங்கே குடியேறியவர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குள்ளேயே ஒடுங்கி, ஒடுங்கி வாழ்ந்தார்கள்.

பிரெஞ்சுக்காரர் ஒரு பகுதிக்குள்ளும் (இவர்களும் தங்களுக்குள் பல்வேறு பகுதிகளாக குடியேறினர்), ஜேர்மனியர் குடியேறி இன்னொர் பகுதிக்குள்ளும் (இவர்களும் தங்களுக்குள் பல்வேறு பகுதிகளாக), இத்தாலியர் குடியேறி இன்னொர் பகுதிக்குள்ளும் (தங்களுக்குள் பல்வேறு பகுதிகளாக), வாழ்ந்தனர். இவ்வாறு குடியேறிய மலைக்குன்றுகளால் சூழப்பட்ட பகுதிகள் தான் புவியியல் ரீதியான "கன்டன்ஸ்" அமைப்பு முறையை அமைப்பதற்கான அடிப்படையைக் கொடுத்தன. இவ் வகையிலேயே சுவிற்சர்லாந்தில் 22 "கன்டன்ஸ்" அமைக்கப்பட்டது. இதில் 15 "கன்டன்ஸ்" பெரும்பான்மையினராகிய (70%) ஜேர்மனிய இனத்தினரின் "கன்டன்ஸ்" ஆகவும், 6 "கன்டன்ஸ்" அடுத்தபெரும்பான்மையினராகியபிரெஞ்சுக்காரரின் "கன்டன்ஸ்" ஆகவும், ஒரு கன்டன்ஸ் இத்தாலியரின் "கன்டன்ஸ்" ஆகவும் உள்ளது.

இந்த 22 "கன்டன்ஸ்" சும் தனித்தனியே தமது அரசியல், பொருளாதார அடிப்படைத் தீர்மானங்களை எடுக்கும் சுயாட்சி உள்ளனவாகக் காணப்படுகின்றன.

தமது சொந்த மொழியிலேயே தமது பிராந்தியத்தின் முழு நிர்வாகத்தையும் நடாத்தும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். மத்திய அரசோடு தொடர்பு கொள்கையில் முழுமையாக

சொந்த மொழியிலேயே தொடர்பு கொள்ளும் உரிமையுடையவர்கள்.

இந்த சுவிஸ்சர்லாந்து இரண்டு சபை ஆட்சி முறையைக் கொண்டது.

1. தேசிய இனங்களின் சபை.
2. மக்கள் சபை.

தேசிய இனங்களின் சபைக்குரிய பிரதிநிதிகள் "கன்டன்ஸ்" இல் இருந்தே செல்கின்றனர். 22 "கன்டன்ஸ்"சிலிருந்தும் தலா இரு பிரதிநிதிகள் வீதம் 44 பிரதிநிதிகளைக் கொண்டு இக் "கன்டன்ஸ் சபை" அமையும்.

தலா ஒவ்வொருபிரதிநிதிகளைக்கொண்டு "அரைக் கன்டன்ஸ்" உள்ளது. இதில் 22 பேர் உள்ளனர்.

மக்கள் சபைக்கும், தேசிய இனங்களின் சபைக்கும் சம அதிகாரம் உள்ளது. ஏதாவது ஒரு சபையால் ஒரு மசோதா நிராகரிக்கப்பட்டால் மறு சபையால் அதைச் சட்டமாக்க முடியாது.

நிர்வாக ரீதியில் பார்க்கையில் சுவிற்சர்லாந்தில் 7 பேர் கொண்ட ஒரு நிர்வாக சபை உள்ளது. இதில் சிறுபான்மை இனத்தவரான பிரெஞ்சு, இத்தாலிய இனத்தினர் நேரடியாக ஆட்சி சபையில் குறைந்தது 2 பேரையாவது கொண்டிருக்க வேண்டுமென்று அரசியல் சட்டம் திட்டவட்டமாகக் கூறுகின்றது.

சட்ட வாக்கத்தில் சகல தேசிய இனத்திற்கும் சமத்துவம், மொழி ரீதியாக 3 மொழிகளும் உத்தியோக மொழிகள், அரசியல், பொருளாதார, நிர்வாக ரீதியில் அனைத்து "கன்டன்ஸ்"சுக்கும் சுயாதிபத்தியம், மத்திய அரசாங்கத்தில் அனைத்து தேசிய இனத்திற்கும் (அவை ஒடுக்கப்பட முடியாதவாறு) பிரதிநிதித்துவம்.

இத்தனை தன்மைகளோடும் கூடி இருப்பதால் தான் ஒரு முதலாளித்துவ அமைப்பில் கூட (சுவிற்சர்லாந்தில்) தேசிய இனப் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது. ★

## கனடா

1976-ல் கனடாவில் 'கியூபெக்' என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு போராட்டம் நிகழ்ந்ததையும், ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்று அது முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதையும் அறிந்திருப்பீர்கள்.

கனடாவின் வரலாறு என்ன? பிரெஞ்சு மக்கள் கியூபெக் என்ற தனிநாட்டை ஏன் கோரினர்? இதன் தீர்வு எவ்வாறு இன்று வைக்கப்பட்டுள்ளது?

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் (இலங்கையைப் போல) பூர்வீகமாக இருந்து வந்த தேசங்கள் அல்ல. செவ் இந்தியர்கள், எக்சிமோக்களைக் கொண்டதாக இருந்ததே அமெரிக்கா கண்டம். 15-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கா கண்டம் கண்டுபிடிக்கப்பட்டு 16-ம், 17-ம் நூற்றாண்டின் பகுதிகளில் தான் அமெரிக்காவில் குடியேற்றம் நிகழத் தொடங்குகின்றது. அப்பொழுது ஆங்கிலேயர்களும், ஏனைய ஐரோப்பியர்களும் அமெரிக்க கண்டத்தினுள் குடியேறச் சென்றனர். இவர்கள் குடியேறச் சென்ற பொழுது அங்கு செவ் இந்தியர்கள் என்ற மக்கள் வளம் பொருந்திய நகர நாகரீகத்தை அமைத்து வாழ்ந்து வந்தனர். அம்பும், வில்லும், வாளும் கொண்ட இந்த செவ் இந்திய மக்களை வேட்டையாடி அவர்களை முழுமையாகக் கொன்று குவித்தே அந்த மண்ணில் ஆங்கிலேயர்கள் குடியேறினர். இதன் மூலம் ஏனைய ஐரோப்பியர்கள் குடியேறியதன் காரணமாகவும், 16-ம் நூற்றாண்டின் பின் உருவாகிய தேசமே அமெரிக்கா; இவ்வாறு குடியேறிய 13 குடியேற்ற நாடுகள் தான் இன்று ஐக்கிய அமெரிக்கா எனப்படுகிறது. (13 அரசுகள் உள்ளன) இதே போல எக்ஸ்சிமோக்கள் வாழ்ந்த கனடாவில் இம் மக்களை அழித்தொழித்து ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரரும் குடியேறினர். பிரெஞ்சுக்காரரர் ஒரு பகுதியிலும் ஆங்கிலேயர் இன்னொரு பகுதியிலும் குடியேறினர். குடியேறிய நாட்டை தமக்குள் பிடித்துக் கொள்ள ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்குமிடையில் ஏற்பட்ட போர்கள் பெரும் போர்களாக அமைந்து பெரும் இரத்தக் களரிகளாக அமைந்தன. இதனால் ஆரம்பத்தில் இருந்தே இவ்விரு பகுதியாளர்களுக்கும் கனடா மண்ணில் முரண்பாடுகள் வரலாற்றுப் பூர்வமாகவே வளர்ந்து வந்தன. ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களின் பகுதிகளைக் கைப்

பற்ற முயற்சிகள் செய்துவந்தனர். பிரெஞ்சுப் பகுதியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆங்கில மயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தனர். பிரெஞ்சுக்காரர் இதை அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக தொடர்ச்சியாக ஏற்பட்ட போராட்டங்களின் பின் 1867-ல் "கொன்பிடரேசன்" (Confederation) என்ற முறை உருவாக்கப்பட்டது. [ஒரு கூட்டாட்சி (சமஷ்டி) முறை] மிகக் குறைந்த பட்ச சமஷ்டி ஆட்சிமுறை பிரெஞ்சு மக்களுக்கு வழங்கப்பட்டது. பிரெஞ்சு மக்கள் கத்தோலிக்க மதத்தினர். கத்தோலிக்க குருமாரின் கரங்களிலேதான் (கியூபெக்) பிரெஞ்சு மாகாணத்தின் ஆதிபத்தியங்கள் அரசியல் நிர்வாகங்கள் இருந்தன. ஆங்கிலேயர்கள் இங்கிருந்த நிலப்பிரபுக்களை, குருமார்களை பிடித்து ஒடுக்கத் தொடங்கிய போதுதான் போராட்டம் வெடித்தது. இவர்களின் கைகளில் அதிகாரங்களைக் கொடுத்து விட்டால் போராட்டம் அழிந்துவிடும் என ஆங்கிலேயர் கூறினர். இந்த வகையில் இவர்களின் கரங்களில் அதிகாரங்களை வழங்கும் நடவடிக்கையாக ஒரு "கொன்பிடரேசனை" அமைப்பாம் எனக் கேட்டனர். அவ்வாறு 1867ல் இது அமைக்கப்பட்டு பிரெஞ்சுக்காரர் கையில் சுயநிர்வாகம் கொடுக்கப்பட்டது.

முழுமையான நிர்வாகங்கள், பொருளாதார ஆதிபத்தியங்கள், மொழி ஆதிபத்தியங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

ஆனல் இதனை அடுத்து போராட்டம் மிகக் குறைந்த பட்சத்திற்கு 90%இற்கு மேல் பின் தள்ளப்பட்டது.

போராட்டங்கள் வெடித்துக் கொண்டு வரும் பொழுது சில குறைந்த பட்ச உரிமைகளை கொடுப்பது, சீர்திருத்தங்கள் என்பன போராட்டத்தை இட்ட மட்டமாக பின் தள்ளும் என்பதை வரலாறு போதிக்கின்றது. இதில் முரண்பட்ட அனுபவங்கள் வரலாற்றில் இல்லை.

கனடாவில் மிகத் தீவிரமாக எழுந்து வந்த போராட்ட உத்வேகம் 'கொன்பிடரேசன்" அமைக்கப்பட்டதும் தணிந்தது.

"றியல்" என்ற பிரெஞ்சுக்காரன் பிரித்தானியர் இடம் இருந்து தமது நிலங்களைப் பாதுகாப்பதற்காக மிகத் தீவிரமாக

பிரெஞ் மாகாணங்களில் ஆங்கிலேயரின் குடியேற்றங்களை எதிர்த்து வந்தான். "நியூபுரோன்ஸ்சுவிக்" என்கின்ற மாகாணத்தில் ஆங்கிலேயர்களை கண்டால் இவன் தனது துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தான். இறுதியில் இவன் பிடிக்கப்பட்டு இவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இத்தோடு இப் பிரச்சனை அடங்கிப் போகிறது. இதன் பின் முழுக்க முழுக்க பிரேஞ்சு மாகாணமாயிருந்த "நியூபுரோன்ஸ்சுவிக்" ஒரு ஆங்கில மாகாணமாக மாறிவிட்டது. இன்று இங்கு 60% ஆங்கிலேயரும், 40% பிரெஞ்சுக்காரரும் உள்ளனர்.

"கொன்பிடரேசனுக்கு" பின் சாதாரணமான சீர்திருத்தங்களும், மத உரிமைகளும், மொழிப் பிரச்சனைகள் தொடர்பாக சில போராட்டங்களும் மட்டுமே தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. மத்தியில் தொடர்பு கொள்வதற்கு பிரேஞ்சு மொழியை அங்கீகரிக்கும்படி போராட்டம் நடைபெற்றது. நிர்வாக மொழி தொடர்பாயும் தமது மாகாணத்தில் போராட்டங்களை முன்னெடுத்தனர். சின்னச் சின்ன சாதாரண உரிமைகள் வழங்கப்பட்டன.

1960 ல் பல்வேறு வகைப்பட்ட நிலைமைகளின் அடிப்படையில் (சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் தந்த புதிய பிரச்சனைகள், மத்திய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட கொந்தளிப்பு கியூபாவில் ஏற்பட்ட புரட்சி) தனி நாட்டு கோரிக்கை எழுந்தது.

"லெவஸ்" என்கின்றவர் "கியூபெக் கட்சி" என்ற கட்சியை அமைத்து "கியூபெக்" என்ற தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தார். இக் கோரிக்கையோடு மாகாணத்தில் தேர்தலில் நின்று 1976 இல் மாபெரும் வெற்றி ஈட்டினர். இதை அடுத்து முதல் அமைச்சராக இவர் வந்தார். தேர்தலில் வெற்றி பெற்று முதல் அமைச்சர் ஆனதும் இவருக்கு என்ற சொந்த நலன்கள் பிரதானமாகின. ஆட்சியின் சுகபோகங்களை துறந்து போராட்டத்தை நடாத்த அவர் தயாராக முடியவில்லை.

அவரோடு இருந்தவர்கள் தனி நாட்டுக் கோரிக்கையை வற்புறுத்திய போதும் "லெவஸ்" தனி நாட்டுக் கொள்கையில் இருந்து தடம் புரளத் தொடங்கினர்.

KOHA-JPL

''லெவஸ்'' ஒரு கோரிக்கையை முன் வைத்தார். தனி நாட்டுக் கோரிக்கையில் இருந்து முழுமையாக நாம் பின் வாங்க வில்லை. ''சவர்னிட்டி அசோசியேசன்'' என்ற ஒரு புதிய கோரிக் கையை நான் முன் வைக்கின்றேன். அதற்கு சர்வஜன வாக் கெடுப்பு நடாத்துவோம் என்று முன் வந்தார்.

''சவர்னிட்டி அசோசியேசன்'' (Sovereignty Association) என்பது கனடாவில் மட்டுமே எழுந்த கோரிக்கையாகும்.

கனடா என்கின்ற நாட்டில் இருந்து அரசியல் ரீதியாக கியூபெக் மாகாணம் பிரியும். பொருளாதார ரீதியாக கியூபெக் குக்கும், கனடாவுக்கும் பொதுவான ''கரன்சி'' இருக்கும். ஒரு நாட்டில் இருந்து மற்ற நாட்டுக்கு செல்ல கடவைச் சீட்டுகள் தேவையில்லை. விரும்பினுல் வெளி உறவுக் கொள்கை தொடர் பாக கூட்டுக் குழு இயங்கலாம் அல்லது தனியாகவும் இயங்க லாம்.

1981 மே மாதம் இக் கோரிக்கையை முன் வைத்து சர்வ ஜன வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆனால் இக் கோரிக்கை தோல்வியில் முடிந்தது. ''சவர்னிட்டி அசோசியேசன்' வேண் டாம், இருக்கின்ற மாகாணமாக இருந்து விடுவோம் என்று மக்கள் வாக்களித்தனர்.

இம் மாகாணத்தின் மொத்தத் தொகையில் 20% ஆங்கி லேயர்; 80% பிரெஞ்சுக்காரர். மொத்த வாக்குகளில் 55% வாக் குகள் வேண்டாமென்றும். 45% வாக்குகள் வேண்டும் என்றும் அளிக்கப்பட்டது. மொத்தத்தில் ''சவர்னிட்டி அசோ சியேசன்'' தோல்வியடைகிறது.

(குறிப்பு: ஆங்கிலேயரின் 20% வாக்குகள் ''சவர்னிட்டி அசோ சியேசனு'' க்கு எதிராகவே வாக்களிக்கப்பட்டிருக்கும். எனவே பிரெஞ்சு மக்களில் பெரும்பான்மையினர் சவர்னிட்டி அசோசி யேசனுக்கே வாக்களித்து இருந்தனர் என்பது ஒரு விடயம்.)

இத்துடன் தனி நாட்டு கோரிக்கை முழுமையாக கைவி டப்படுகின்றது. சில சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன. மத்திய அரசாங்கத்தோடு பிரேஞ்சு மொழியில் தொடர்பு கொள்ள

லாம் மந்திய அரசாங்க நீதிமன்றங்களில் பிரெஞ்சு மொழியில் விசாரணை செய்யலாம். எந்த ஒரு பிரெஞ்சு மக்களும் தான் விரும்பும் மொழியில் தமது மாகாணத்துக்கு வெளியில் உள்ள வரோடு தொடர்பு கொள்ளலாம்.

கனடாவிலேயே அதிக பொருளாதார வளம் கொண்ட பிரதேசம் கியூபெக். அமெரிக்காவின் அதிக முதலீடு உள்ள கனேடிய மாகாணம் கியூபெக். மேலைத்தேய நாடுகளின் பல்தேசிய கம்பனிகளின் முதலீடு நிரம்பிய மாநிலம் கியூபெக்.

இவை அனைத்தும் கியூபெக் தனிநாடாக பிரிவதற்கு எதிராகத் தொழிற்பட்டன.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் அனைத்தும் தனிநாட்டுக்கு எதிராகத் தொழிற்பட்டன. அங்குள்ள முதலாளிகள் அனைவரும் தனிநாட்டுக்கு எதிராக மக்கள் மத்தியில் செயற்பட்டனர். குறிப்பிட்ட 2 மாதங்களுக்குள் அங்கு நடைபெற்ற வாதப் பிரதிவாதங்கள் (ரீ. வி, றேடியோ, பத்திரிகை, மேடை) 2000 ஆகும். இவ் விவாதங்களில் பெரும் மூலதனக்காரர் பங்கெடுத்தனர். ஏகாதிபத்திய நலன்களோடு உள்ளவர்கள் பங்கெடுத்தனர். மக்களின் மூளையில் அவர்களுக்குத்தேவையான ஒரு சிந்தனை உருவாக்கப்பட்டது. பிரெஞ்சுக்காரர் முன்பு இருந்ததை விட சற்று கூடிய உரிமையைப் பெற்றனர். ஆனால் முழுமையான உரிமைகளை அவர்கள் பெறவில்லை. முழுமையான சமஸ்டி ஆட்சி அவர்களுக்கு கிடைக்கவில்லை. ★

## சோவியத் யூனியன்

சோவியத் யூனியனில் தேசிய இனப்பிரச்சனைக்கு மிகச் சிறந்த முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. ரஸ்சியாவில் மன்னர் ஆட்சிக்காலத்தில் அங்கிருந்த அனைத்து தேசிய இனங்களும் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ரஸ்சியா, போலந்து, செக்கோசிலாவாக்கியா ஆகிய நாடுகள் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்களைக் கொண்டிருந்தன. இவை தேசிய இன ஒடுக்குதலுக்கும் உள்ளாகி இருந்தன. இத் தேசிய இன மக்களை ஒன்று படுத்தி மொத்தமாக ஒரு ஆட்சி மாற்றத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமாயின் தேசிய இனப் பிரச்சனைக்கு என்ன தீர்வு? என்ற கேள்விக்கு பதில் அளித்தாக வேண்டியிருந்தது. இவ் விவாதத்தில் பலர் கலந்து கொண்டனர்.

தேசிய இனங்களுக்கு கலாச்சார சுயநிர்ணய உரிமையுண்டு என்றும், தேசிய இனங்களுக்கு நிர்வாக சுயநிர்ணய உரிமை தான் உண்டு என்றும், தேசிய இனங்களுக்கு பொருளாதார சுய நிர்ணய உரிமை தான் உண்டு என்றும் பல்வேறு வகைப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. ஆனால் லெனின் கூறினார் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியான சுய நிர்ணய உரிமை உண்டு அது பொருளாதாரத்தை உள்ளடக்கியது. அரசியல் ரீதியில் பிரிந்து செல்லும் உரிமையையும் இது கொண்டது. (பிரிந்து செல்லும் உரிமை வாசசெடுப்பு மூலமாக பிரிந்து செல்லுதல்)

இவ் அடிப்படையில் பல் தேசிய இனங்கள் ரஸ்சியாவில் ஒன்றுபட்டு போல்ஸ்விக் கட்சியின் தலைமையில் ஜார் மன்னனுக்கு எதிராக போரிட்டு ஓர் புதிய தேசத்தை 1917 ஒக்டோபர் மாதம் படைத்தனர். வெற்றிக்குப் பின் பிலோரைசியன். உக்கிரேனியன் பின்லாந்து ஆகிய மூன்று தேசிய இனங்களும் தாம்பிரிந்து செல்லப் போவதாகக் கூறினர். லெனின் கூறினார் "நீங்கள் பிரிந்து தான் செல்ல வேண்டுமென்றால் அதை நாம் அனுமதிக்கிறோம் ஆனால், நான் ஆலோசனை கூறுகிறேன் நீங்கள் பிரிந்து போய் வாழ்வதை விட சேர்ந்திருந்து வாழ்வது தான் உங்கள் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூகக் கலாச்சார மேம்பாட்டுக்கும் உகந்தது.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

கடந்த கால வரலாற்று அனுபவம் காரணமாக அப்பயத்தின் அடிப்படையில் பிரிந்து போக விரும்புகிறீர்கள். உங்கள் பயம் தெளிந்ததும் வாருங்கள். உங்களுக்காக சோவியத் சோசலிச அரசமைப்பானது எப்போதும் கதவுகளை திறந்து வைத்திருக்கும்'' என்றார்.

பிலோரைசியன், உக்ரேனியன், பின்லாந்து ஆகிய மூன்று தேசிய இனங்களும் பிரிந்து சென்றன.

சோவியத்யூனியனில் பல் தேசிய இனங்களையும் இணைத்து ''ரிப்பப்லிக்கன்'' அமைப்பு எனப்படுகிற (குடியரசு ஆட்சி முறை) ஆட்சிமுறை அமைக்கப்பட்டது. பிரதானமான தேசிய இனங்களை அடிப்படையாகக் கொண்டு பல தேசிய இனங்களையும் உள்ளடக்கி குடியரசு ஆட்சிமுறையை தனித் தனி தேசிய இனங்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளார். இவ் அனுபவத்தை கண்ட உக்ரேனியன், பிலோரைசியன். இனங்கள் மீண்டும் தாம் இணைந்து கொள்ள முன்வந்தன. 1917 ஆண்டு பிரிந்து சென்ற இரு தேசிய இனங்கள் லெனினது காலகட்டத்திலேயே 1922-ம் ஆண்டு திரும்பவும் வந்து சோவியத்துடன் இணைந்து கொண்டன.

தாம் தனித்திருந்து பொருளாதார மேம்பாடு அடையாத நிலையில் சோவியத் யூனியனின் பொருளாதார மேம்பாட்டைக் கண்டு, இணைவதன் மூலம் தங்களின் நலன்கள் பெரிதாக இருக்குமென்ற அனுபவத்தைக் கண்ட பின்னரும், தாம் ஒடுக்கப்பட மாட்டோம் என்ற நம்பிக்கையை பெற்றுக்கொண்ட பின்னரும் தான் இவை இணைந்துகொண்டன.

சோவியத் யூனியனில் 15 'ரிப்பப்ளிக்' உண்டு (15 குடியரசுகள்) இதில் 4 வகையான அமைப்புகள் உள்ளன.

தேசிய இனத்தின் தன்மைக்கேற்ப இவை மாறுபடும். ஒரு ரிப்பப்ளிக்கை எடுத்துக்கொண்டால் ஒரு பெரிய தேசிய இனத்தின் பேரால் அதனை மையமாகக்கொண்டு ''ரிப்பப்ளிக்'' அமைக்கப்படும். அவற்றுக்குள் பல தேசிய இனங்கள் இருக்கலாம். பெரிய தேசிய இனமும், ஏனைய தேசிய இனமும் சேர்ந்து இந்த குடிய



00258

ரசு அமைகிறது. இப்பெரிய தேசிய இனம் மற்றைய தேசிய இனத்தை ஒடுக்க முடியாதவகையில் அவர்களுக்கு தனித்தனியாக ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக் அமைப்பு அமைக்கப்படுகிறது. முதலாவது "றிப்பப்ளிக்கை", "யூனியன் றிப்பப்ளிக்" என்பர். (இது 15) ஒவ்வொரு யூனியன் றிப்பப்ளிக்குள்ளும் "ஒட்டோனமஸ் றிப்பப்ளிக்" உள்ளது. இது ஒரு தேசிய இனத்தை மட்டும் பூரணமாகக் கொண்டுள்ளது. இதைவிட பூரணமாக தேசிய இனமாக இல்லாது வளர்ந்து கொண்டு வருகின்ற இனத்திற்கு "றிப்பப்ளிக் ஒட்டோனமஸ் ஒப்பிலாஸ்" (ரஸ்சியமொழி)உம், இதற்கு கீழாகவும் சிறுபான்மை இனமாய் காணப்படுகிறவர்களுக்கு "ஒட்டோனமஸ் றிப்பப்ளிக் ஒப்றக்"உம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு யூனியன் றிப்பப்ளிக்குக்கும் ஒவ்வொரு அரசியல் திட்டம் இருக்கும். இவர்கள் இதற்குள் சுதந்திரமாகச் செயற்படுவார்கள். இதைவிட இதற்குள் உள்ள "ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக்கும்", "யூனியன் றிப்பப்பிளிக்குக்கு" உட்பட்ட அரசியல் திட்டம் இருக்கும். இதற்குக் கீழே "ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக் ஒப்லாஸ்"இன் அரசியல்திட்டம் இருக்கும். இது பூரணமான பொருளாதார சுயாதிபத்தியத்தைக் கொண்டிருக்க மாட்டாது. இதில் இவர்களுக்கு குறைந்த அதிகாரமே காணப்படும். ஆனால் தமது தேசிய இனம் சம்பந்தமாக, மொழி, கலாச்சாரம், தமது நிர்வாகம் சம்பந்தமாக சகல சுயாதிபத்தியமும் இவர்களுக்கு உண்டு. ஒட்டோனமஸ் ஒப்பிலாஸ் பொருளாதாரம் சம்பந்தமாக எவ்வித தீர்மானங்களையும் எடுக்க முடியாது. ஒவ்வொரு யூனியன், ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக்குகளும் தனது சுயமொழியிலேயே நிர்வாகம் நடாத்தும் உரிமை உடையவை. தொடர்பு மொழியாக மட்டும் ரஸ்சிய மொழியிருக்கும்.

பெருஞ் சாலைகள், பாரிய தொழிற்சாலைகள் போடுவது தொடர்பாக மட்டும் மத்திய அரசாங்கத்தின் தொடர்பு ஏற்படும். அப்படித் தொடர்பு ஏற்பட்டாலும் கூட மத்திய அரசாங்கம் ஒரு பாரிய தொழிற்சாலையை ஒரு யூனியன் றிப்பப்பிளிக்குக்கு போட்டாலும் அதற்குள் வேலை வழங்கப்படும் நபர்கள் நிர்வகிக்கப்படும் நபர்கள் முழுப் பேருமே யூனியன் றிப்பப்பிளிக்கின் தீர்மானத்துக்கு மீறியதாக இருக்க முடியாது.



82286

சோவியத் யூனியனில் இரு சபைகள் உள்ளன.

1. தேசிய இனங்களின் சபை. (Chamber of Nationalities)

2. சோவியத்துக்களின் சபை. (Chamber of soviets)

தேசிய இனங்களின் சபைக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் போது எல்லா றிப்பப்பிளிக்கிலும் இருந்தும் தலா 25 பேர் தெரிவு செய்யப்படுவர். அந்த றிப்பப்பிளிக்கில் உள்ள ஓட்டோனமஸ் றிப்பப்பிளிக்கில் 11 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர். அதற்குள் காணப்படும் ஒப்லாஸ்சுக்கு 5 பிரதிநிதிகளும், ஒப்ரக்குக்கு 1 பிரதிநிதியும் தெரிவு செய்யப்படுவர்.

தேசிய இனங்களில் சபை தெரியப்பட்டு இருக்குமாயின் அதில் சகல இனங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்.

இரு சபைகளுக்கும் சம அதிகாரம் உள்ளது. ஒரு சபையால் நிராகரிக்கப்பட்ட தீர்மானம், மறு சபையால் சட்டமாக நிறைவேற்றப்பட முடியாது.

15 றிப்பப்பிளிக்கில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி "பிரசீடியம் ஒவ் சோவியத் சுப்ரீ' முக்குச் செல்வார். இதுவே நிர்வாகத்தின் சபையாகும். இதில் 32 பிரதிநிதிகள் இருப்பர். 15 றிப்பப்ளிக்குகளின் தலைவர்களும் இதற்குச் செல்வர். இவர்களை விடவும் கம்.கட்சியில் இருந்து 17 பேர் செல்வர். இந்த 32 பேருமே நாட்டின் நிர்வாகத்தை நடத்துவர். இவ் 32 பேரில் ஒருவராக கம்.கட்சி பொதுச் செயலாளர் இருப்பார்.

சோவியத்யூனியனில் பூரணமான சுயாதிபத்தியம் கொண்ட சமஸ்டி ஆட்சியின் கீழ் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. ★

## செக்கோசெலவாக்கியா

இங்கு பிரதானமாக இரண்டு தேசிய இனங்கள் வாழ்கின்றன. 1.செச் 2.சிலாபியர். கிட்லர் 1939ல் படையெடுப்பின் மூலம் சிலாபியர் இனத்தைப் பிரித்து தனியரசாக மாற்றிவிட்டான். 1945ம்ஆண்டு சோவியத்யூனியனின் உதவியுடன் (சோவியத்யூனியன் கிட்லரை தோற்கடித்த காலகட்டம்) மீண்டும் இரண்டும் இணைந்தன. படிப்படியாக பல மாற்றங்களுக்கு வந்து 1960ம் ஆண்டு செக்கோசெலவாக்கியா இரண்டு சமத்துவமுள்ள தேசிய இனங்களின் ஒற்றை ஆட்சி அரசு என்று பிரகடனப்படுத்தப்பட்டது. சோசலிச அரசு அடிப்படையில் சமஸ்டி இல்லாமல் சமத்துவம் உள்ள தேசிய இனங்களாக இரண்டும் அங்கீகரிக்கப்பட்டு ஒற்றை ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆனல் இரு தேசிய இனங்களுக்கும் இடையில் பிரச்சனை வளர்ந்தது. 1968ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி இப்பிரச்சனைக்குத் தீர்வாக சமஸ்டி ஆட்சி என்ற மசோதா சட்டமாகியது. 1969ம் ஆண்டு சமஸ்டி அரசு உருவாக்கப்பட்டது. சோசலிச ஆட்சி முறையில்கூட சமஸ்டி ஆட்சி இல்லாமல் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது என்பதற்குசெக்கோசெலவாக்கியா ஒரு உதாரணமாகும்.

செக்கோசெலவாக்கியாவில் காணப்படுவது இரு சபை கொண்ட ஆட்சி முறையாகும்:

1. மக்கள் சபை
2. தேசிய இனங்களின் சபை

தேசிய இனங்களின் சபையில் செக் இனமும் சிலாவியர் இனமும் சம பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

இரண்டு சபைகளில் ஏதாவது ஒன்றில் ஒரு மசோதா நிராகரிக்கப்படின் அது சட்டமாக முடியாது. இந்த வகையில் இங்கு தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டது. ★

## இந்தியா

1935ம் ஆண்டு இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு மாகாண ஆட்சி முறையை அரசியல் திட்டத்தில் கொண்டு வந்தது. இத் திட்டத்தின் கீழ் மாகாணங்கள் பிரிக்கப்படும் போது தேசிய இனங்கள், சிறுபான்மை இனங்கள் என்று எவையும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல், பிராந்திய ரீதியாகவே மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்திய தேசிய இனங்களின் எதிர்ப்புணர்வு காந்தியின் தலைமையிலான இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதை சாதகமாக்கியது. எனினும் இவ்வகையான சுதந்திரம் மிகவும் தற்காலிகமானது என்பதை இந்திய சுதந்திரத்திற்குப் பின் தேசிய இனங்கள் என்ற பிரச்சனை இந்தியாவில் வெடித்ததில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

ராஜாஜியை பொறுத்தவரை அவர் காந்திக்கு ஒரு முறை ஆலோசனை வழங்கினார். ''இந்த முஸ்லீம்கள் பிரிந்து போவதற்கு விரும்புகிறார்கள். அவர்கள் பிரிந்து போக அனுமதியுங்கள். அது எதிர்காலத்தில் ஐக்கியத்திற்கு வழி வகுக்கும். எதிர்காலததில் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றால் பிரிந்து போக விடுங்கள்'' என்று கூறினார். காந்தி இதற்கு எதிராக பிடிவாதமாக நின்றார். ஆனால் இறுதியில் பெரும் அழிவுகளின் பின் முஸ்லீம்கள் பிரிந்து சென்றனர்.

பிரிட்டிஸ்காரரின் வெளியேற்றத்தின் பின்னர் தேசிய இனங்களின் பிரச்சனை கூர்மையடைந்தது. பிரச்சனைகள் வலுக்கத் தொடங்கின. தேசிய இனங்களின் பிரச்சனைகளுக்கு தேசிய இனங்களின் அடிப்படையில் சமஸ்டி அரசுகள் தான் தீர்வாக அமையும் என நேருவுக்கு பல சிந்தனையாளர்கள் ஆலோசனை கூறினார்கள். இவ் யோசனைகளை நேரு நிராகரித்தார்.

போராட்டங்கள் வலுத்தன. தேசிய இனங்களின் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் இருந்தது தென்பகுதி மக்களின் பிரதேசங்கள் முழுவதும் பிரச்சனைக்குரியனவாய் இருந்தன.

இதைத் தவிர ஏனைய கரையோரப் பிரதேசங்களும் பிரச்சனைக் குரியனவாய் மாறின. இதன் இறுதியில் தான் 1953 இல் ஆந்திரப்பிரதேசத்தில் முதன்முதல் தேசிய இன அடிப்படையில் ஒரு சமஸ்டி அரசு அமைக்கப்பட்டது. இதன் பின்னர் மாநில மீளாய்வு கமிசன் அமைக்கப்பட்டது இது 1956ம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இவ் அறிக்கை மொழிவாரி அடிப்படையில் சமஸ்டி ஆட்சி முறை அமைப்பதுதான் இந்தியாவை ஐக்கியப்படுத்த உதவும் எனவே இவ் அடிப்படையில் சமஸ்டி ஆட்சிமுறை அமைக்கப்பட வேண்டும் எனக்கூறியது. இதனை அடுத்து சட்டம் இயற்றப்பட்டு 14 மாநிலமாக இந்தியா பிரிக்கப்பட்டது.

இதற்குப்பின்னரும் போராட்டங்கள் நிகழ்ந்தது. ஒரு பஞ்சாப் ஆக இருந்து கரியானா, பஞ்சாப் என இரண்டு மாநிலஙகளாக 1966ல் பிரிகிறது. இதே வகையில் பம்பாய் மாநிலம் மராட்டி, குஜராத்தி என இரண்டாக பிரிகின்றது. இவ்வாறு பிரிந்து பிரிந்து மொழிவாரி அடிப்படையில் 22 மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

ஆனால் இது பூரணத்துவமற்ற சமஸ்டி ஆட்சிமுறையாகும். இந்திய மத்திய அரசு விரும்பினால் எந்த நிமிடமும் மாநில அரசு கலைக்கப்பட முடியும். இதற்கு உதாரணங்களும் உண்டு இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின்படி மாநில அரசுகளின் எல்லைகளையும் மத்திய அரசு சாதாரண சட்டத்தின் மூலம் மாற்றலாம. இது மிகத் தவறானதாகும். மாநில அரசின் அங்கீகாரத்துடனும், மத்திய அரசின் 2/3 தீர்மானத்தின் பின்னரே இவ்வாறு எல்லைகளை மாற்றக்கூடியதாய் இருக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை மாநில அரசின் அங்கீகாரம் இல்லாமலேயே லோக்சபாவில் சாதாரண பெரும்பான்மையின் அடிப்படையில் எல்லைகளை மாற்றலாம்.

இந்தியாவில் இழுபறிகளின் மத்தியிலேயே இவ்வமைப்பு முறை நடைமுறையில் உள்ளது. இந்தியாவில் உள்ள இவ் வமைப்பு முறையானது தேசிய இனங்கள் மீது இன ஒடுக்கு முறையைப் பிரயோகிப்பதற்குஉகந்ததாய்உள்ளது. முதலாளித்துவ அரசமைப்பு தேசிய இனமுரண்பாடுகளை வளர்த்து தேவையான கட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளது. எந்தக்கட்டத்திலும் இந்தியாவில் உள்ள சமஷ்டி அரசமைப்பின் கீழ் தமது சொந்த தேவைகளுக்காக தேசிய இன முரண்பாடுகளை வளர்க்க முடியும். அவர்களை அடிபட வைக்க முடியும்.

தேசிய இனங்களின் சுயாதிபத்தியத்திற்கு உத்தரவாதமில்லாத ஒரு அரைகுறை சமஷ்டி ஆட்சியே இதுவாகும். ★



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை

தேசிய இனப்பிரச்சனைகளுக்கான தீர்வுகள் உலகில் பல்வேறு வகையில் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக் குரிய தீர்வு எவ்வாறு அமையப் போகின்றது ?

தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்குரிய தீர்வு ''ஈழவிடுதலை''யே என்று அது பரந்து பட்ட மக்களின் ஆதரவோடு ஆயுதப் போராட்டமாக இன்று பரிணமம் அடைந்துள்ளது. இவ் ஆயுதப் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாது பலவீனம் அடைந்த நிலையிலும், சர்வதேசரீதியாக தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்குடனும் ஸ்ரீலங்கா அரசு பேச்சு வார்த்தைக்கு இறங்கி வந்தது.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை ஈழவிடுதலைப் போராட்டத்தை இப்படியே விட்டால் அது தனி அரசாக மாறுவதற்கான நிலையையே அடையும் என்பதை உணர்ந்து கொண்டுள்ளது. எனவே முடியுமாயின் முன்னைவிட ஏதோ சில சலுகைகளையும் உரிமைகளையும் கூட்டிக் கொடுத்து இப்போராட்டத்தை எப்படியும் மழுங்கடிப்பது என்று தீவிரப் பிரயத்தனத்தில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

தனது இந்த நோக்கத்துக்கு தமிழர் கூட்டணியின் சந்தர்ப்பவாத போக்கையும் தமிழ் பேசும் மக்களுக்கும், விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான சில முரண்பாடுகள், என்பவற்றையும் சாதகமாக ஸ்ரீலங்கா அரசு நோக்குகின்றது. இந்திய மத்திய அரசு இலங்கை தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக ''ஈழத்தை'' ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் பகிரங்கமான விடயமாகும், இதுவும் ஸ்ரீலங்கா அரசு தனக்கு சாதகமாகக் கொள்கின்ற அம்சங்களில் ஒன்று.

திம்புப்பேச்சு வார்த்தையின் போது ஸ்ரீலங்கா அரசு இந் நோக்கங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

விடுதலை இயக்கங்கள் குறிப்பாக ENLF, பேச்சுவார்த்தையின் மூலம் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்திற்குரிய சரியான தீர்வு

கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ளவில்லை. இலங்கையின் வரலாற்றையே அவை திருப்பிக் காட்டுகின்றன. பேச்சுவார்த்தையின் மூலம் ஸ்ரீலங்கா அரசை சர்வதேச ரீதியாக அம்பலப்படுத்துவதே இவர்களின் நோக்கம். அத்தோடு அரசியல் ரீதியான அந்தஸ்தையும் இதற்கூடாக பெற்றுக் கொண்டனர்.

திம்புப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து பேசுவதற்கு முன் முக்கியமான அடிப்படையான நிபந்தனைகளை ENLF முன்வைத்தது.

1. தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம்.
2. இம்மக்களுக்கென்று ஒன்றிணைந்த மொழிவாரிப்பிரதேசம் ஒன்று இலங்கையில் உண்டு
3. இம்மக்கள் சுயநிர்ணய உரிமையுடையவர்கள்.
4. ஸ்ரீலங்காவிலுள்ள (தமிழ் பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள) அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு விஞ்ஞான பூர்வமான தீர்வு ஏற்பட வேண்டும் என உண்மையிலேயே யாராவது விரும்பினால் இந்த அடிப்படை அம்சங்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டியனவாகும்.

சிறிலங்கா அரசு இவ் அடிப்படை அம்சங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. நிராகரித்தது. சிறிலங்கா அரசின் நோக்கம் தமிழ் தேசிய இனத்திற்குரிய சரியான தீர்வை முன்வைப்பது என்பது இல்லை. அதன் நோக்கம் ஒருசில அற்ப சலுகைகள் உரிமைகளைக் கொடுத்து தன்னை நிலைநிலைய வைத்துள்ள ஈழ விடுதலைப்போராட்டத்தை மழுங்கடிப்பதே.

திம்பு பேச்சு வார்த்தை ஒருவாறு முடிவடைந்து போக பல இழுபறிகளுக்கு பின்னர் மறுபடியும் கூட்டணிக்கும், சிறி லங்கா அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடக்கின்றது. திம்புவில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் அடிப்படையான அந்த 4 கோரிக்கைகளும் TULF ஆல் முன்வைக்கப்படவோ பின்னர் வலியுறுத்தப்படவோ இல்லை என்பதும் அவ் அடிப்படைக் கோரிக்

கையை முன் வைத்த ENLF தற்போது பேச்சுவார்த்தை அரங்கின் முன்னணியில் இல்லை என்பதும் முக்கியமானது. தற்போது நடைபெறும் 'கூட்டணி - சிறி லங்கா அரசு' பேச்சு வார்த்தையில் தமிழ் தேசிய இனத்தின் அடிப்படையான இவ் அம்சங்கள் பற்றி எவையும் இல்லை. அவை குப்பைத் தொட்டியில் வீசப்பட்டுவிட்டன. இப்பேச்சு வார்த்தையில் உள்ள முக்கியவிடயங்கள் அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான விடயமே. சிறி லங்கா அரசு முன்வைத்த ஆலோசனைகளில் தனித்தனி மொழிகளையும், புராதன கலாச்சாரத்தையும், தொடர்ச்சியான பிரதேசங்களையும், சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றை கொண்ட பிரதானமாக இரு தனித்துவமான தேசிய இனங்கள் வாழும் நாடுதான் இலங்கை என்று குறிப்பிடவில்லை. அதிமுக்கியமாக தமிழ் மக்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம் என அங்கீகரிக்கப்படவும் இல்லை.

இந்நிலையில் பேச்சு வார்த்தை சாதிக்கும் அதிகபட்ச தீர்வு என்ன? வடக்கையும், கிழக்கையும் இணைத்து ஒரு மாநிலம். அதற்கு ஒரு முதலமைச்சர், மந்திரிசபை, சில அதிகாரங்கள். இவை யென்றால் தமிழ் மக்களை தாம் சமாளிக்க முடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது. வடக்கும் கிழக்கும் இணைந்தால் விடுதலை இயக்கங்களை திருப்திப்படுத்த முடியும் என ஜே. ஆர் இடம் அமிர் கூறியுள்ளார் என பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்திய மாநிலங்களுக்கு உள்ளவற்றை விட (அவையே பூரணத்துவமற்ற சுயாட்சி அமைப்புகள்) மிகக் குறைவான அதிகாரங்களுடன் (தேசிய இனம், பாரம்பரியம் இவற்றைப் பற்றி எல்லாம் பேசாமல்) தேவை ஏற்படின் வடக்கையும், கிழக்கையும் இணைத்து ஒரு தீர்வை கொடுக்கலாம் என ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது.

தனிநாடு என்பதற்கு புறம்பாக ஸ்ரீலங்கா அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்றுக் கொள்ளும் எந்த தீர்வையும் இந்திய அரசு ஏற்றுககொள்ளும்.

போராட்டத்தின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள், பொருளாதார கஸ்ரங்கள் துயரம் நிறைந்த சம்பவங்களில் இருந்து விடுபட வழிகள் தென்படின் அதை நோக்கி மக்கள் ஈர்க்கபபடுவதும் தவிர்க்கப்பட முடியாததாகும். அதுமட்டுமன்றி

KOHA-JPL

இனப்பிரச்சனையை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளாத நிலையில் கலை, கலாச்சாரம் பாரம்பரிய தொடர்புகளின் மூலம் தமிழ் நாட்டு (இந்தியா) அரசியல் அமைப்பை பற்றிய அதீதகற்பனையில் உள்ள மக்களுக்கு மாநில சுயாட்சி என்ற தீர்ப்பு திருப்திகரமாய் அமைவது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்நிலைமைகள் அனைத்தும் சேர்ந்தும், இந்திய அரசின் நட்பும் இத்தீர்வு தொடர்பாக விடுதலை இயக்கங்களை இக்கட்டான நிலைமைக்குத் தள்ளலாம். எனவே பேச்சுவார்த்தை மூலமாக ஒரு தீர்வு ஏற்படுவதாயின் தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்குரிய தீர்வாக அது ஒரு போதும் இருக்கப் போவதில்லை என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

### இலங்கையில் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாதா?

முதலாளித்துவ நாடான சுவிற்சர்லாந்தில் தேசிய இனப்பிரச்சனைக்கு முழுமையான, சரியான தீர்வு காணப்பட்டது என்பதை முன்னர் கூறியிருந்தோம். இவ்வடிப்படையில் இங்கும் தீர்வு ஏற்படுமாயின் இலங்கை ஒரே நாடாக இருக்கும் போதே தேசிய இனப்பிரச்சனைக்குரிய தீர்வு காணப்படலாம். இதற்குரிய சாத்தியப்பாடுகள் எவ்வாறு உள்ளன என ஆராய்கையில் எமக்குப் பாதகமாகவே இப்போது நிலைமைகள் உள்ளன.

இன்றைய காலகட்டம் ஏகாதிபத்திய சகாப்தமாகும். ஏகாதிபத்தியங்கள் மூன்றும் உலக நாடுகளில் பொருளாதார வகைப்பட்ட பாரிய சுரண்டல்களை பல வழிகளிலும் நடாத்தி வருகின்றன. நிதி உதவிகள், கடன் உதவி, தொழில் அபிவிருத்தி, கூட்டுத் தொழிற்சாலைகள், நிபுணத்துவ உதவி போன்றவையிலும், தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைச் சந்தை, சுதந்திர வர்த்தக வலயங்கள் என்ற பல வகைப்பட்ட வகையில் மூன்றும் உலகநாடுகளின் கனிவளங்கள், பொருளாதார வளங்கள் கபடத்தனமாக ஏகாதிபத்தியங்களால் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மூன்றும் உலக நாடுகளின் பொருளாதாரத்தினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன்மூலம் அந்

AHO2
J41

நாடுகளின் அரசியல் மீது தனது செல்வாக்கைச் செலுத்தி தனது சுரண்டலுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துகின்றன.

ஏகாதிபத்தியங்களின் இச் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு எதிராக மூன்றும் உலகநாடுகளின் மக்கள் கிளர்ந்தெழக் கூடாது. அப்படிக்கிளர்ந்தெழுவார்களாயின் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். எனவே இதற்காக மூன்றும் உலகநாடுகளில் தேசிய இன முரண்பாடுகளை உருவாக்க அவற்றை தேவைக்கேற்ப கூட்டி, குறைத்து மோதல்களை ஏகாதிபத்தியங்கள் ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டம் முனைப்படையாது தவிர்க்கப்படுகின்றது குறிப்பிட்ட நாட்டில் உள்ள தேசிய இனங்கள் தமக்குள் மோதிக்கொள்கின்றன. இம்மோதல்கள் அளவுக்கு அதிகமாக ஏற்பட்டு ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு தடையாகவும் அமைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியமும் (உ+ம் இலங்கை) ஏகாதிபத்தியங்களுக்கு உள்ளது.

இலங்கையில் தேசிய இன முரண்பாடு இவ்வாறு ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு தடையாக அமைந்து விட்டது. சுதந்திரவர்த்தக வலயங்கள் மற்றும் ஏகாதிபத்திய மூலதனங்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது. இவற்றைவிட முனைப்படைந்து நிற்கும் ஈழவிடுதலைப் போர் ஒரு புதிய சோசலிச அரசமைப்பை தென் ஆசியாவில் உருவாக்கி, அது ஏகாதிபத்திய நலன்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடுமோ என்ற கிலி இவர்களைப் பிடித்துக் கொண்டுவிட்டது. இந்த வகையில் இலங்கையில் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தி போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டிய தேவை ஏகாதிபத்தியத்துக்கு உள்ளது. ஏகாதிபத்திய சார்பாளர்களாகிய J.R, அமிர் ஊடாக இதை அமுலுக்கு கொண்டுவர ஏகாதிபத்தியங்கள் முயல்கின்றன.

---

**குறிப்பு**

| பக்கம் 8 | பிழை | திருத்தம் |
|---|---|---|
| வரி 10 | 15 கன்டன்ஸ் | 16 கன்டன்ஸ் |
| வரி 11 | 6 கன்டன்ஸ் | 5 கன்டன்ஸ் |

அதேவேளை சுவிற்சர்லாந்து போன்ற முழுமையான தீர்வு ஏற்படுமாயின் தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையிலான முரண் பாடுகள் தீர்க்கப்பட்டு இவர்கள் அனைவரும் இணைந்து ஏகாதி பத்தியங்களுக்கு எதிராக போராடப் புறப்பட்டு விடுவார்கள். எனவே தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் நிரந்தர ஐக்கியம் ஏற்படக் கூடாது. ஏகாதிபத்திய நலனுக்கு இது ஆபத்து. இதற்காகவே ஒரு அரைகுறையான தீர்வை இலங்கையில் J R அரசுக்கு ஊடாக ஏகாதிபத்தியம் முன்வைக்கின்றது.

ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களுக்காக தேசிய இன முரண் பாடுகள் எழுந்த நாடுகளை இரண்டு நாடுகளாக பிரித்த நடை முறைகளும் உள்ளன. ஏகாதிபத்திய நலன்களுக்குச் சாதகமா? பாதகமா? என்பதைப் பொறுத்தே இது அமையும்.

இலங்கை இரண்டு நாடாக அமைவது ஏகாதிபத்தியத்திற்கு பொருளாதார ரீதியிலும் பார்க்க மிக முக்கியமாக அரசியல் இராணுவ ரீதியில் மிகப் பாதகமே. இந் நிலை காரணமாக இலங்கை பிளவுபட ஏகாதிபத்தியங்கள் விரும்பவில்லை. எனவே இத்தகைய செயற்பாடு ஏகாதிபத்தியங்களினால் இலங்கையில் நிகழப்போவதில்லை.

இத்தகைய அரசியல் பின்னணியில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு உள்ளது. தமிழ்த் தேசிய இனம் முழு மையான ஒரு விடுதலையைப் பெறுவது என்பது எவ்வித தலையீ டுமற்ற அவர்களின் நீண்ட கடினமான விஞ்ஞான பூர்வமான ஒரு மக்கள் யுத்தத்தின் முடிவிலேயே உள்ளது. இதற்குப் புறம் பாக ஒரு தீர்வு (பேச்சுவார்த்தைகள் உட்பட) ஏற்படுமாயின் அது முழுமையற்ற அரைகுறைத் தீர்வாகவே அமையும். இத் தீர்வு உடனடியாக இன முரண்பாடுகளை தணிக்கலாம். மக்க ளுக்கு தற்காலிக ஒரு அமைதியை ஏற்படுத்தலாம். புயலுக்கு முன் ஏற்படும் அமைதியே இது மறுபடியும் ஒரு இரத்தக்களரி இந்த நாட்டில் பெருக்கெடுத்தே தீரும்.

★

# நதி வெளியீட்டக வெளியீடுகள்

- வெகுஜன அமைப்புகளுக்குக் கட்சிக்கும் இடையேயான உறவுகள் - செழியன் - 2.00

- கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவர்கள் - லியூஷோசி - 3.00

- காற்சட்டை அணியும் பெண்மணி - வொங்நுன்ஸி - 5.00

- நாளைய நாயகி - சூரியன் - 3.00

- உன் அடிச்சுவட்டில் நானும் - பான் தி குயென் + ட்ரான். தின்வான்

  (வெளிவரவுள்ளது)

அதேவேளை சுவிற்சர்லாந்து போன்ற முழுமையான தீர்வு ஏற்படுமாயின் தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு இவர்கள் அனைவரும் இணைந்து ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக போராடப் புறப்பட்டு விடுவார்கள். எனவே தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் நிரந்தர ஐக்கியம் ஏற்படக் கூடாது. ஏகாதிபத்திய நலனுக்கு இது ஆபத்து. இதற்காகவே ஒரு அரைகுறையான தீர்வை இலங்கையில் J R அரசுக்கு ஊடாக ஏகாதிபத்தியம் முன்வைக்கின்றது.

ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களுக்காக தேசிய இன முரண்பாடுகள் எழுந்த நாடுகளை இரண்டு நாடுகளாக பிரித்த நடைமுறைகளும் உள்ளன. ஏகாதிபத்திய நலன்களுக்குச் சாதகமா? பாதகமா? என்பதைப் பொறுத்தே இது அமையும்.

இலங்கை இரண்டு நாடாக அமைவது ஏகாதிபத்தியத்திற்கு பொருளாதார ரீதியிலும் பார்க்க மிக முக்கியமாக அரசியல் இராணுவ ரீதியில் மிகப் பாதகமே. இந் நிலை காரணமாக இலங்கை பிளவுபட ஏகாதிபத்தியங்கள் விரும்பவில்லை. எனவே இத்தகைய செயற்பாடு ஏகாதிபத்தியங்களினால் இலங்கையில் நிகழப்போவதில்லை.

இத்தகைய அரசியல் பின்னணியில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு உள்ளது. தமிழ்த் தேசிய இனம் முழுமையான ஒரு விடுதலையைப் பெறுவது என்பது எவ்வித தலையீடுமற்ற அவர்களின் நீண்ட கடினமான விஞ்ஞான பூர்வமான ஒரு மக்கள் யுத்தத்தின் முடிவிலேயே உள்ளது. இதற்குப் புறம்பாக ஒரு தீர்வு (பேச்சுவார்த்தைகள் உட்பட) ஏற்படுமாயின் அது முழுமையற்ற அரைகுறைத் தீர்வாகவே அமையும். இத் தீர்வு உடனடியாக இன முரண்பாடுகளை தணிக்கலாம். மக்களுக்கு தற்காலிக ஒரு அமைதியை ஏற்படுத்தலாம். புயலுக்கு முன் ஏற்படும் அமைதியே இது மறுபடியும் ஒரு இரத்தகளரி இந்த நாட்டில் பெருக்கெடுத்தே தீரும்.

★

KOHA JPL

# நதி வெளியீட்டக வெளியீடுகள்

சோதனை இல.
பதிவு இல.
அபோக்தி நூலக சேவைகள்

- வெகுஜன அமைப்புகளுக்கும் கட்சிக்கும் இடையேயான உறவுகள் - செழியன் - 2.00

- கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்கள் - லியூஷோசி - 3.00

- காற்சட்டை அணியும் பெண்மணி - வாங்துன்ஸி - 5.00

- நாளைய நாயகி - சூரியன் - 3.00

- உன் அடிச்சுவட்டில் நானும் - பாஸ்தி குயென் + ட்ரான். தின்லான்

  (வெளிவரவுள்ளது)

82286

வரவுள்ளது !

# உன் அடிச்சுவட்டில் நானும்'

[வியட்னமிய நாவல்]



னுடைய நண்பர்களைக் கேட்டபோது, கெரில்லாப் போர் முறையில் டுவது அவ்வளவு சிரமமானது இல்லை என்று கூறினார்கள். எதிரியை க்கும் யாரும் கெரில்லா ஆகலாம். அவர்களது வெறுப்பு எவ்வளவு ஆழ இருக்கின்றதோ, அவ்வளவுக்கு நன்றாகப் போரிடலாம். ஒரு துப்பாக்கியைக் ள்வதற்கு ரொம்ப நாட்கள் பிடிக்காது. நான் கொஞ்சம் கஸ்ரப்பட் ம் அவர்களுக்கு உதவியாக இருக்க முடியும் என்று உறுதியாக நம்பு . என் இதயம் முழுவதும் எதிரிகளின் மீது வெறுப்பு நிறைந்திருக் ''

- குயேன் -